இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 10 – சனிக்கிழமை 26 ஜூலை 2025 – வெளியூர் 16 பக்கங்கள்   Established : 10.8.1942 - Volume : 83 - Issue 346 : Thiruvalluvar Year - 2056 - Aadi 10 - Saturday 26 July 2025 - Dak 16 Pages ₹ 5.00

## மாநிலங்களவை உறுப்பினர்களாக புதிதாகப் பொறுப்பேற்றவர்களுக்கு வாழ்த்து!

# பதவிக்காலம் நிறைவு பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, ஜூலை 26 -**

**“பதவிக்காலம் நிறைவுபெற்ற நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களைப் பாராட்டியும் புதிதாகப் பொறுப்பேற்கவுள்ள உறுப்பினர்களை வாழ்த்தியும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கை வருமாறு:-

**பதவிக்காலம் நிறைவு பெற்றவர்கள்:**

**ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ**





நாடாளுமன்ற வரலாற்றில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள் நான்கு முறை மாநிலங்களவை உறுப்பினராகவும், ஒரு முறை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றித் தனக்கு கிடைத்த நீண்ட நெடிய அனுபவத்தின் வாயிலாக, தமிழர் நலனையும் தமிழ்நாட்டின் உரிமைகளையும் சங்கநாதமென முழங்கியவர்.

1978இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முதன்முறையாக மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அண்ணன் வைகோ அவர்களின் குரல், அன்று எப்படி ஒலித்ததோ, 47 ஆண்டுகள் கழித்து தனது 81ஆவது வயதில் மாநிலங்களவை உறுப்பினர் பொறுப்பு நிறைவடைகிற நாளிலும் அதே குரலில் உரிமைக்காக ஒலித்ததைக் கேட்டு மெய்சிலிர்த்தது.

அண்ணன் வைகோ அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநிலங்களவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை பணியாற்றிய காலத்தில், ‘நாடாளுமன்றப் புலி’ என்கிற அளவிற்கு அவர் குரல் அங்கு ஒலித்தது மட்டுமின்றி, கழக மேடைகளிலும் சிங்கமென அவருடைய கர்ஜனை கேட்கும்.

அவரை அழைத்து பல கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். அவருடைய பேச்சில், அரசியல் வரலாற்றைக் கேட்டிருக்கிறேன். நேற்று (ஜூலை 24) மாநிலங்களவையில் தனக்கான பிரியாவிடை நிகழ்வில் அண்ணன் வைகோ அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், கலைஞரின் மனசாட்சியான சிந்தனையாளர் முரசொலி மாறன் அவர்களையும் நினைவுபடுத்தி நன்றி கூறியதுடன், எனக்கும் நன்றி தெரிவித்ததை மருத்துவமனையிலிருந்து தொலைக்காட்சி வாயிலாகப் பார்த்தேன்.

திராவிட இயக்கத்தின் தூணாக நின்று, தமிழர்களின் உரிமைக்கான அவரது செயல்பாடுகள் மக்கள் மன்றத்தில் என்றும் தொடர்ந்திட வேண்டும் என அன்பு அண்ணனை வாழ்த்தி மகிழ்கிறேன்.

**தொ.மு.ச. பேரவை - மு.சண்முகம்**

கருப்புசிவப்பு கழகத்தில் அண்ணன் சண்முகம் அவர்கள் தொழிலாளர்களின் சிவப்புச் சிந்தனை சார்ந்த உரிமைக் குரலாக இருப்பவர். 50 ஆண்டுகளுக்கு மேல் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைக் கட்டமைத்து, ஒவ்வொரு மே தினத்திலும் தங்கள் சங்கத்தினருடன் என்னையும் சிவப்புச் சட்டையில் வீரவணக்கம் செலுத்த வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பவர்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் அவையில் தொழிற்சங்கப் பிரதிநிதியாக முழங்கிய அவரது குரல், இந்திய நாடாளுமன்றத்திலும் முழங்கிட வேண்டும் என்பதால் கழகத்தின் உறுப்பினராக அண்ணன் சண்முகம் அவர்கள் மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தனது பணியினைச் சிறப்பாக நிறைவேற்றி, பதவிப் பொறுப்பை நிறைவு செய்திருக்கிறார்.

உரிமைகளை விட்டுத் தராத அவருடைய கொள்கை உணர்வும், தொழிலாளர் நலனில் அவருக்குள்ள அக்கறையும் மாநிலங்களவை விவாதங்களில் எதிரொலித்தன. நாடாளுமன்ற மாநிலங்களவையில் அண்ணன் சண்முகம் அவர்கள் ஆற்றிய பணிகளுக்குக் கழகத்தின் தலைவர் என்ற முறையில் என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவருடைய தொழிற்சங்கப் பணிகள் தொய்வின்றித் தொடர்ந்திட வாழ்த்தி மகிழ்கிறேன்.



**புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா**

‘மூத்தோர் அவை’ என அழைக்கப்படும் நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகத்தின் இளங்குருத்தாக அனுப்பி வைக்கப்பட்ட தம்பி எம்.எம். அப்துல்லா அவர்கள், தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து, மாநிலங்களவையில் மக்கள் சேவகராகச் சிறப்பாகப் பணியாற்றி, மாற்றுக்கட்சியினரும் பாராட்டும் வகையில் நடந்துகொண்டதை அறிந்து கழகத்தின் தலைவர் என்ற முறையில் பெருமை கொள்கிறேன்.

மாநிலங்களவையில் வருகைப் பதிவு, எழுப்பிய கேள்விகள், பெற்ற பதில்கள், அதன் வழியாக நிறைவேறிய திட்டங்கள் என எல்லாவற்றிலும் சிறப்பாகச் செயல்பட்ட தம்பி அப்துல்லாவின் ஓய்வில்லாப் பணிகள், குறுகிய காலத்திலேயே, அவரை முழுமையான ‘பார்லிமெண்ட்டேரியன்’ என அடையாளம் காட்டியிருக்கிறது. நாட்டுப்பற்றையும் மதநல்லிணக்கத்தையும் மாநிலங்களவை விவாதங்களில் உரத்த குரலில் அழுத்தமாகப் பதிவு செய்த தம்பி அப்துல்லா, தனது பதவிப் பொறுப்பு நிறைவடையும் நாளிலும் மதநல்லிணக்க அடையாளமான கோரிக்கையை முன்வைத்ததன் மூலம் கழகத்தின் வார்ப்பு என்பதை மெய்ப்பித்திருக்கிறார்.

சமூகநீதிப் பாதையில் தன் பயணம் தொடரும் என்று அவர் மாநிலங்களவையில் குறிப்பிட்டதுபோல, மக்கள் மன்றத்தில் கழகத்தின் சார்பில் அவருக்கான பணிகள் காத்திருக்கின்றன எனக் கூறி வாழ்த்தி மகிழ்கிறேன்.

**புதிதாகப் பொறுப்பேற்கும் பி.வில்சன் - கமல்ஹாசன் - எஸ்.ஆர்.சிவலிங்கம் - கவிஞர் சல்மா**

அதேபோல், சமூகநீதி காக்க அயராது பணியாற்றும் நீதிமன்றங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளைப் பெற்றுத்தந்து ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளைக் காத்து வரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள்,



நாடாளுமன்ற மாநிலங்களவையில் மீண்டும் தன்னுடைய அழுத்தமான வாதங்களை வைத்து உரிமைக்குரல் எழுப்பவுள்ளார். அவருக்கும், மாநிலங்களவையில் புதிதாகப் பொறுப்பேற்று தங்களுடைய கருத்துகளைப் பதிவுசெய்யவுள்ள அருமை நண்பர் கமல்ஹாசன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோருக்கும் அவர்களது பணி சிறக்க என்னுடைய வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தாங்கள் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி கலைஞானி கமல்ஹாசன், வழக்கறிஞர் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்ற போது எடுத்த படம்.

## “ஓரணியில் தமிழ்நாடு” - பரப்புரை

# இதுவரை 2 கோடிக்கும் அதிகமானோர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்!

### வீடு வீடாகச் சென்று சாதனைகளை கழகத்தினர் எடுத்துக் கூறினர்!

*சென்னை, ஜூலை 26-*

*“ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் பரப்புரை இயக்கத்தில் இதுவரை 2 கோடிக்கும் அதிகமானோர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.*

*தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க “ஓரணியில் தமிழ்நாடு” எனும் மாபெரும் முன்னெடுப்பை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஜூலை 3ம் தேதி தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் தங்கள் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று, திராவிட மாடல் அரசின் சாதனைகள், திட்டங்கள் உள்ளிட்டவற்றை எடுத்துக் கூறி, ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் உறுப்பினர்களை சேர்த்து வருகின்றனர்.*

*அதன்படி, “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் பரப்புரை இயக்கத்தில் மாநிலம் முழுவதும் குடும்பம் குடும்பமாக 2 கோடிக்கும் மேற்பட்டோர், சமூகநீதியை காக்கும் ஜனநாயக பேரியக்கமான தி.மு.க.வில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்!*

## மாநிலங்களவையில் புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு!

# தி.மு.க. சார்பில் தேர்வான உறுப்பினர்கள் தமிழில் உறுதிமொழி ஏற்பு!

*புதுடெல்லி, ஜூலை 26-*

*தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்வான தி.மு.க. உறுப்பினர்கள் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோர் நாடாளு மன்றத்தில் நேற்று பதவியேற்றனர்.*

*மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனும் புதிய மாநிலங்களவை உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார்.*

*தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்களாக சேவையாற்றிய எம்.எம். அப்துல்லா, மு.சண்முகம், பி.வில்சன் உள்ளிட்டோரின் பதவிக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து, புதிய உறுப்பினர்களாக தி.மு.க. சார்பில் பி.வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோரும், தி.மு.க. கூட்டணி சார்பில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உள்ளிட்டோரும் அறிவிக்கப்பட்டனர்.*

*கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் ஆதரவுடன் இவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். இந்நிலையில், மாநிலங்களவையில் புதிய உறுப்பினர்களாக தி.மு.க.வைச் சேர்ந்த மூன்று பேரும் தமிழில் பதவியேற்றுக் கொண்டனர்.*

*மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனும், மாநிலங்களவையின் புதிய உறுப்பினராக தமிழில் பதவியேற்றுக் கொண்டார்.*